**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.35/2019**

PW–1 ஜெகநாதன் நாள்.06.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 முதல் 9, 11, 12, 14 முதல் 16 மற்றும் 21, 22 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு கொஞ்சம் சுமாராக எழுத படிக்க தெரியும். இடப்பிரச்சனைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்அம்மா பெயர் மாரியாயி, அப்பா பெயர் செல்லமுத்து ஆகும். அவர்களுக்கு 2 ஆண்குழந்தைகள் மற்றும் 2 பெண்குழந்தைகள். அந்த 2பெண்குழந்கைளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2பெண்குழந்தைகள் இந்த வழக்கிற்கு அவசியமான மற்றும் தேவையான தரப்பினர் என்றும், அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தோஷத்திற்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல. பெண்குழந்தைகளுக்கு நான் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு அறிவிப்பு அனுப்பவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. விஸ்தீர்ணம் மட்டும் தெரியும். அது 1ஏக்கர் 2 செண்ட் ஆகும். அதற்கு நான்கெல்லைகள் தெரியாது. தாவாசொத்து பூர்விக சொத்து என்பதை காட்ட நான் ஆணவம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்து ஆதியில் செல்லான் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1986ம் ஆண்டு மேற்படி செல்லானிடம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதால் தாவாசொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எங்கள் குடும்பசொத்துக்களை பொறுத்து 1996ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட பாகப்பத்திரம் மூலம் பாகம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட சொத்துக்களை தவிர வேறு பூர்விக சொத்துக்கள் கிடையாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் அப்பா தான் பிரித்து கொடுத்தார். என்அப்பா தான் அதை எழுதினார். தாவாசொத்து எங்களுடைய பூர்விக சொத்து கிடையாது என்பதால் தான் பாகப்பிரிவினை பத்திரத்தில் அதுபற்றி குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு ஆதராக தாவாசொத்தை 2005ம் ஆண்டு 1ம் பிரதிவாதி

தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த விவரம் தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் சொன்னேன். பிராதில் 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2005ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை பிளாட்டுகளாக பிரித்து பல்வேறு தேதிகளில் 6 முதல் 24 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த விவரம் தெரியாது. தாவா சொத்தில் பிளாட்டை வாங்கய நிறைய பேர்கள் தற்போது வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாசொத்து விளாமுத்தூர் ரோட்டுக்கு கீழ்புறமாகவும், அரசு விருந்தினர் விடுதி மற்றும் கலெக்டர் பங்களாவிற்கு எதிராக மெயினான இடத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் சந்தை மதிப்பு அதிகமாக இருப்பதால் நான் வீணாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்அம்மா மாரியாயி 2014ம் ஆண்டு இறந்துவிட்டார். என்அம்மாவிற்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்ற பிரதிவாதிகளுக்கு கிரயபத்திரம் எழுதிகொடுத்தவிவரம் தெரியும் என்றால் சரியல்ல. தாவாசொத்து என்னுடைய தம்பியான 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட சுயசம்பாத்திய சொத்து என்பதால் தான் அவர் கிரயம் கொடுக்கும்போது என்அம்மா ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்து 1ம் பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் அதில் எனக்கு பாகம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>25ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய வயது 87 ஆகும். எனக்கு தொழில் விவசாய வேலையாகும். சொந்த நிலத்திலும் பயிர் செய்வேன், கூலி வேலைக்கும் செல்வேன். என்அப்பா சுமார் 50 வருடங்களுக்கு முன்பு எனக்கு பூர்விக சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்தார். வருடம் சரியாக ஞாபகமில்லை. கடந்த 50 வருடங்களாக எனக்கு

பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தில் நான் விவசாயம் செய்தேன். என்அப்பா வாய்மொழியாக சொல்லி சீட்டு எழுதி கொடுத்தார். அதை வைத்து நாங்கள் பத்திர ஆபிசில் பத்திரம் பதிந்தோம். பத்திரம் எழுதிய தேதி ஞாபகமில்லை. வருடம் தெரியாது. என்அப்பா உயிரோடு இருந்த காலத்தில் பாகம் செய்துகொண்டோம். என்அப்பா இறந்து சுமார் 35 வருடங்களாக ஆகிவிட்டது. 1ம் பிரதிவாதி என்உடன் பிறந்த தம்பி ஆவார். அவர் அரசாங்க பணியில் இருந்தார். பாகத்தில் எனக்கு எந்த சொத்து மற்றும் என்தம்பிக்கு எந்த சொத்து பிரிந்தது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் குறிப்பாக சொல்லமுடியாது. வீட்டில் பாதி, காட்டில் பாதி. எங்கள் குடும்பத்திற்கு பூர்விகமாக எத்தனை ஏக்கர் இருந்தது என்று என்னால் கூறஇயலாது. எனக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீர்ணம் தெரியாது. எனக்கு பிரிந்த பாகத்திற்கு பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுத்திருப்பார்கள். தாவாசொத்து 1ம் பிரதிவாதி சொத்து என்றும், அவர் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டு அவர் வரி செலுத்தி அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி தாவா சொத்தை அவர் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு கொடுத்துள்ளார். அது தானபத்திரமா என்று எனக்கு தெரியாது. எழுதி வைத்த விவரம் தெரியாது. நான் போய் பார்க்கும்போது பிளாட்டுகளாக பிரித்து கல்போட்டு இருந்தது. தாவாசொத்தின் அருகில் எனக்கு காடு உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் 20 வருடங்களுக்கு முன்பு பிளாட்டுகள் போடப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. 25ம் பிரதிவாதியான வங்கியை எதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்று தெரியவில்லை. வங்கிக்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு வங்கிக்கு ஆதரவாக எழுதிகொடுக்கப்பட்ட அடமான சொத்தை பொறுத்து எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல.

**<u>10ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்அப்பா உயிரோடு இருந்தகாலம் வரை எனக்கும், அவருக்கும் பிரச்சனை எதுவும் கிடையாது. சுமூகமாக தான் இருந்தோம். என்அப்பாவிற்கும், 1ம் பிரதிவாதிக்கு இடையே அடிக்கடி பிரச்சனை வரும். 1980ம் ஆண்டு என்அப்பாவிற்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் 1ம் பிரதிவாதி தனியாக போய்விட்டார் என்றால் சரிதான். 1982ம் ஆண்டில் நெடுஞ்சாலைதுறையில் 1ம் பிரதிவாதி வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். 1986ம் ஆண்டில் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அது பூர்விக சொத்து அல்ல என்றால் சரியல்ல. பாகபத்திரம் ஏற்படுவதற்கு முன்பும், பின்பும் பஞ்சாயத்து பேசினோம். எந்ததேதியில் எங்குவைத்து பஞ்சாயத்து பேசினோம் என்று பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து பட்டா மாற்ற முயற்சிக்கும்போது தெரியவந்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தவிவரம் தெரியவந்தது. தாவாசொத்தை பொறுத்து எடுத்த வில்லங்க சான்றை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தை பிளாட்டுகளாக 5 முதல் 24 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குறைவான நீதிமன்றம் கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>20ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.